# திருமலைத்தீபம்

**THIRUMALAI THEEPAM**

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

எழுந்து ஒளி வீசு

சுடர் 24
விலை 20/=

தை இதழ்-2016, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 24


E-mail- catetcota@gmail.com
T.P- 026 2221022, 0263202532


**"கடவுள் அன்பாய் இருக்கிறார்"** (1யோவான் 4:8)

# HAPPY NEW YEAR!

## ஆயரின் செய்தி



**அன்பு நிறைந்த வாசகர்களுக்கு,**

புலர்ந்திருக்கும் புதிய ஆண்டு அமைதியும், அன்பும் இரக்கமும் நிறைந்த ஆண்டாக உங்கள் அனைவருக்கும் அமைய நான் வாழ்த்துகின்றேன்.

2016ம் ஆண்டில் நாம் எமது மறைமாவட்டத்திற்கென்று பல திட்டங்களை வகுத்து ஆரம்பிக்கிறோம். இவற்றை விபரமாக எனது இவ்வாண்டிற்கான சுற்றுமடலில் தந்துள்ளேன். இச்சுற்றுமடல் திருமலை தீபம் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும். பங்குகள் தோறும் ஞாயிறு தினத்தில் வாசிக்கப்படும். எனவே குருக்கள், துறவறத்தவர், பொது நிலை இறைமக்களாக நாம் திரண்டு இத்திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுப்போம். அனைத்துத் துறைகளிலும் நாம் முன்னேற வேண்டும். இதற்கு அனைவரது ஒத்தழைப்பும் தேவையாக உள்ளது.

இது இரக்கத்தின் ஆண்டு. இறைவனின் இரக்கத்தை சிறப்பாக அனுபவிக்கும் ஆண்டு. உருவாக்கப்படும் சந்தர்ப்பங்களை நாம் முழுமையாக பயன்படுத்துவோம்.

இதற்காக இம்மாதம் சில நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சிறிய கிறிஸ்தவ சமூகங்களை ஆரம்பிப்பது அல்லது ஊக்கப்படுத்துவது மறைமாவட்ட திட்டங்களில் முதன்மை மேய்ப்புப்பணித் திட்டமாகும். இதற்கான சிறப்பு ஆயத்தக் கருத்தரங்கு இம்மாதம் 9ம் திகதி நடைபெறும். இதில் அனைத்து குருக்கள், துறவறத்தோர் மற்றும் பங்குகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொதுநிலையினர் பங்குபற்றுவார்கள். இதைத் தொடர்ந்து இம்மாத இறுதியிலும் இன்னுமொரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 15ம் திகதி பொங்கல் திருவிழா, அறுவடையின் திருவிழா. உழைக்கும் ஒவ்வொரு தொழிலாளியும் இறைவனுக்கு நன்றி கூறுகின்ற நாளாகும். தமிழரின் சிறப்பான இந்த பெருவிழா இனிதே அமைய நாமும் ஆசிப்போம், ஒவ்வொரு தொழிலாளியையும் பாராட்டுவோம்.

16ம் திகதி இலங்கை நாட்டின் அப்போஸ்தலர் தூய யோசேப் வாஸ் பெருவிழா. தூய யோசேப் வாஸ் பெயர் கொண்ட சிறிய குருமடத்தின் பெருவிழாவுமாகும். குருமட அதிபர், மாணவர்களைப் பாராட்டுகிறோம். துறவற அழைத்தலுக்காகவும் விசேடமாக செபிப்போம்.

தூய யோசேப் வாஸ் எமது மறைமாவட்டத்திற்கும் வந்து பணியாற்றியுள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் மேலும் எமக்குக் கிடைத்தவண்ணமுள்ளன. இது பற்றிய சிறப்புக் கட்டுரையையும் இப் பத்திரிகையில் நீங்கள் வாசிக்கலாம். தூய யோசேப் வாஸ் போல நாமும் இறைபணிக்காக எப்போதும் எம்மை அர்ப்பணிக்க முன்வருவோம்.

உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும், சமூகங்களிலும், பங்குகளிலும் தூய திரித்துவத்தின் ஆசீரும் மரியன்னையின் பரிந்து பேசுதலும் எப்போதும் அமைய வாழ்த்தி செபிக்கின்றேன்.

**பேரருட்திரு. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

## மறையாசிரியர்களுக்கான நத்தார் ஒன்றுகூடல்



திருமறைக்கல்வி நடுநிலையத்தால் நடாத்தப்பட்ட மறையாசிரியர்களுக்கான நத்தார் ஒன்று கூடல் 12.12.2015 அன்று காலை 10மணியளவில் ஆரம்பமாகி மதியம் 01.30 மணியளவில் நிறைவுற்றது.

இந் நிகழ்வானது கடந்த மூன்று வருடங்களின் பின்னர் நடைபெற்ற ஒரு நிகழ்வாகும் ஏனெனில் வருடந்தோறும் நடைபெற்று வந்த மறையாசிரியர் ஒளிவிழாவானது தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றைய நிகழ்வின் முதல் நிகழ்ச்சியாக ஒளியேற்றும் வைபவம் இடம் பெற்றது. அதன் பின்னர் பாலையூற்று மறையாசிரியர்களின் ஆரம்ப வழிபாடு தமிழ், சிங்களம், உட்பட இரு மொழிகளிலும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இயக்குனர் தந்தையர்கள் அருட்பணி N.C. அருள்வரதன், அருட்பணி S.R. ஜெயரெட்ணம் ஆகியோரது வரவேற்புரை இடம் பெற்றது. வரவேற்புரையினைத் தொடர்ந்து மறையாசிரியர்களுக்கான விளையாட்டுக்கள் ஆரம்பமாகியது இவ்விளையாட்டில் மறையாசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அது மட்டுமல்லாது வருகை தந்திருந்த அருட்தந்தையர்கள், அருட்சகோதர சகோதரிகளுக்கான விளையாட்டுக்களும் நடைபெற்றன. விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவ்வொன்று கூடலுக்கு சகல பங்குகளிலிருந்தும் மறையாசிரியர்கள் வருகை தந்து நிகழ்வைச் சிறப்புறச் செய்தமை வரவேற்கத்தக்கது.

அதுமட்டுமன்று நூற்றுக்குமதிகமான மறையாசிரியர்களும் கலந்து சிறப்பித்தமை மேலும் குறிப்பிடத்தக்க விடயமாகும்

இறுதியில் நத்தார் தாத்தா வருகையுடன் நத்தார் பரிசில்களும் வழங்கப்பட்டு அன்றைய ஒன்றுகூடலானது இனிதே மகிழ்வுடன் நிறைவுற்றது.




வாசகர்கள், அன்பர்கள் , வாடிக்கையாளர்கள்,
எழுத்தாளர்கள் அனைவருக்கும்
திருமலைத் தீபத்தின்
புதுவருட நல் வாழ்த்துக்கள்.

அனைவருக்கும்
திருமலைத் தீபத்தின்
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்




**'மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'** (தூய மாற்கு 1 : 15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

புதிய ஆண்டிலே மீண்டும் உங்களோடு பேச எனக்கு ஒரு வாய்ப்பு பெருமகிழ்வே முதலில் புத்தாண்டே மலரவேண்டும் புதுப்பொலிவுகள் தரவேண்டும் என வாழ்த்திக்கொள்கிறேன்.

வருடத்தின் முதல் நாளிலே இறைவனின் தாயாரான அன்னை மரியாளின் பெருவிழாவை கொண்டாடிக்கொண்டு புதிய வருடத்தினுள் நுழைகின்றோம். அன்னையின் அன்பும் வழிகாட்டலும் நமக்கு என்றும் இருக்க வேண்டும் என்னும் உறுதிப்பாட்டுடன் நமது காலடிகளை முன்வைத்துச் செல்வோம்.

புற இனமக்களைத் தரிசித்த நாளான திருக்காட்சி விழாவையும் கொண்டாடுகின்றோம். இயேசுவின் திருமுழுக்கு நாளையும் கொண்டாடுகின்றோம். அத்தோடு பொதுக்காலத்தின் முதலாவது வாரம் ஆரம்பமாகின்றது.

மேலும் இம்மாதத்திலே தூய யோசேப் வாஸ் அடிகளாரின் விழாவையும் கொண்டாடுகின்றோம். அது மட்டுமல்லாமல் அடிகளாரின் நாமம் தரித்து இயங்கிவரும் சிறிய குருமடத்தின் அதிபர் மாணவர்களையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

இன்னும் பல நிலைகளிலே எமது ஆன்மீகப் பயணம் நடைபோடுவதை நாம் மனதிற் கொண்டு செயற்பட வேண்டும்.

அரசியல் நிலைகளை நோக்கும் போது மாறுபட்ட கருத்துக்களும் உறவுகளையும், உணர்வுகளையும் உள்வாங்கி வெளிவரும் உயர்வான எண்ணங்களையும் காண்கின்றோம். சிறப்பாக அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான பல வேறுபட்ட எண்ணங்களையும் காண முடிகின்றது. எது எப்படி இருந்தாலும் யுத்தம் முடிவடைந்து காலங்கள் கழிந்து கொண்டிருக்கும் போது கூண்டிலே அரசியல் கைதிகளை இன்னும் அடைத்து காலத்தைக் கழிக்காமல் அவர்களை பொது மன்னிப்பின் கீழ் விடுதலையாக்கி வாழ வழிவகிக்க வேண்டும்.

புதிய ஆண்டிலே நிற்கும் நாம் "பழையன கழிதல் புதியன புகுதல் என்னும் உயர்வான சிந்தனைகளை உள்வாங்கி வளமானதும் உயர்வானதுமான நிலைகளை கடைபிடித்தும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் உணர்வோடு அனைவரையும் மகிழ்வூட்டி வாழ்வோம் என்னும் மனநிலையோடு அனைவருக்கும் புதுவருடத்தின் வாழ்த்துக்களையும் தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.

# அவர் நடந்த பாதையில்.... வெல்வெரி

**முன்னுரை**

எம் நாட்டில் கத்தோலிக்க விசுவாசம் உடையாமல் தூய யோசேப்வாஸ் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் அயராது பணி புரிந்தார். இப் பணிகளில் எல்லா வகையான இடர்களுக்கும் முகம் கொடுத்துத் தன் இறுதி மூச்சுவரை விசுவாசத்தைப் பாதுகாக்கப் போராடினார். அந்தவகையில் அவரது பணிவாழ்வை எழுத்துருவில் கொண்டுவரப் பலர் முயற்சி செய்துள்ளனர். Msgr. லடிஸ்லொஸ் சலேஸ்கி sj, அருட்பணி ஞானபிரகாசர் OMI, அருட்பணி S.G. பெரேரா sj ஆகியோர் முக்கியமான வரலாற்று எழுத்தாளர்களாவர்.

**கிழக்கில் தூய யோசேப்வாஸ் பணிபுரிந்த இடங்கள்**

எனினும் தூய யோசேப்வாஸின் பணிகள் கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் விரிவான, முழுமையான ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. அவர் திருகோணமலை மறைமாவட்டத்தின் பல பகுதிகளில் ஒல்லாந்தரினுடைய பார்வையில் இருந்து தன்னைப் பாதுகாத்து, இரகசியமாக துணிவுடன் பணி செய்தார் அந்த வகையில் **கொட்டியாரம் (மூதூர்), வேதத்தீவு (மூதூர்) வெல்வெரி** என்பன முக்கியமான இடங்களாகும். தன்னுடைய பயணப்பாதையில் தம்பலகாமத்தினூடாக பயணம் செய்த அவர் அப்பிரதேசத்திலும் மறை பணி புரிந்திருக்கச் சாத்தியங்கள் உள்ளன.

அருட்பணி பேர்ணியோலா sj, தொகுத்த 'இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரலாறு' நூல்களில் தூய யோசேப்வாஸின் கொட்டியாரப் பணிகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன. எனினும் வெல்வெரி வேதத்தீவுப் பணிகள் தெளிவாகத் தரப்படவில்லை.

இது தவிர வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பயணத்திலும், கண்டியிலிருந்து கிழக்கு நோக்கிய பயணத்திலும் அவர் பணி புரிந்த பல ஊர்கள் எம் மறைமாவட்டத்தில் இருந்து இருக்கலாம். சரியான ஆதாரங்கள் இன்மையால் இந்தத் தகவல்கள் இன்னும் இலைமறை காயாகவே இருக்கின்றன. எதிர் காலத்தில் இவை பற்றிய ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

**வடக்கிலிருந்து கிழக்கிற்கான தூய யோசேப் வாஸின் பயணப் பாதை**

வடக்கில் தனது பணியை முடித்த பின்னர் கிழக்கிற்குத் தூய யோசப் வாஸ் தனது பயணத்தை ஆரம்பித்தார். 1694/5 ல் அளம்பில் பகுதியிலிருந்து அவர் இப்பயணத்தை ஆரம்பித்தார். அங்கிருந்து தென்னமரவாடி ஊடாகக் காட்டுப் பாதைகளில் தென் கிழக்கு நோக்கிப் பயணம் செய்தார். புல்மோட்டை, திரியாய் பிரதேச எல்லைகளின் ஊடாகக் கட்டுக்குளம் பகுதியை அடைந்து, கள்ளம்பட்டை பிரதேசத்தின் காட்டுப்பகுதிக்கு வந்தார். அங்கிருந்து குச்சவெளி பகுதியின் பின் புறத்தினூடாக புலிக்கண்டிக்குளம் பகுதிக்கு அல்லது கும்புறுபிட்டியின் தென் பகுதிக்கு வரக்கூடிய காட்டுப் பாதைகள் இரண்டு காணப்பட்டன. அங்கிருந்து வெல்கமவிற்கு மேற்கு திசையிலிருந்த காட்டினூடாக அவர் வெல்வெரியை வந்து அடைந்தார்.



**வெல்வெரியின் சரித்திரப் பின்னணி**

பிரித்தானியர் காலத்தில் இது வெல்வெரிக்காடு என்று அழைக்கப்பட்டது. அண்மைக்காலம் வரை இப்பெயர் நிலைத்திருந்தது.

எனினும் தூய யோசேப் வாஸினுடைய கடிதங்களில் இது வெல்வெரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதி குளத்து நீர்ப்பாசனத்தையும், மழைநீரையும் நம்பி இருக்கின்ற விவசாய நிலப்பகுதியாகும்.

முற்காலத்தில் இப்பகுதி இரு பயணப்பாதைகளை தன்னகத்தே கொண்டிருந்தது.

1. திருகோணமலை ~ பன்குளம் வீதி
2. விளாங்குளம் ~ வெல்கம வீதி

இந்த இரண்டு பாதைகளும் சந்திக்கும் பகுதியாக வெல்வெரி அமைந்துள்ளது. இதனால் இது முற்காலத்தில் மக்கள் பொருட்களை பண்டமாற்றம் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் பொருத்தமான இடமாகக் காணப்பட்டது.

போர்த்துக்கேயர் காலத்தில் திருகோணமலையில் கிறிஸ்தவம் விரைவாகப் பரவியது. புதுக் கிறிஸ்தவர்கள் போர்த்துக்கேயர் பயன்படுத்திய கரையோரங்களிலும், கரையை அண்டிய பகுதிகளிலும் வாழ்ந்தார்கள். இப்பகுதிகளில் பல கத்தோலிக்க ஆலயங்கள் கட்டி எழுப்பப்பட்டன. இக்காலப்பகுதியில் வெல்வெரியிலும் கத்தோலிக்கர் வாழ்ந்திருக்கச் சாத்தியங்கள் இருந்தன.

எனினும் ஒல்லாந்தர் காலப்பகுதியில் கத்தோலிக்கர் துன்புறுத்தப்பட்டதால் கரையோரங்களில் வாழ்ந்த கத்தோலிக்கர் நாட்டின் உட்பகுதிகள் நோக்கி தப்பிச் செல்லத் தொடங்கினர். திருகோணமலையின் நகரப்பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்கர் ஒல்லாந்தாரின் ஆதிக்கம் இல்லாத பகுதிகளில் குடியேறத் தொடங்கினர். திருகோணமலை நகரத்தில் இருந்து 12km தூரத்தில் அமைந்துள்ள வெல்வெரி அவ்வாறான ஒரு இடமாகக் காணப்பட்டது. ஆகவே அக்காலத்தில் தப்பிச் சென்ற கத்தோலிக்கர் வாழ்ந்த ஒரு இடமாகவும் வெல்வெரி அமைந்திருக்கலாம்.

மாந்தைப் பிரதேசத்தில் இவ்வாறான துன்புறுத்தல்களால் மரியன்னையின் திருச் சொரூபத்துடன் கத்தோலிக்க மக்கள் மடுப்பிரதேசத்திற்கு தப்பிச் சென்றதையும், பிற்காலத்தில் மடு ஒரு திருத்தலமாக உருவானதையும் இவ்விடத்தில் நினைவில் கொள்ள வேண்டும். அதே போல வஹாக்கோட்டை, அருட்பணி மைக்கல் மெல்லோ பணிபுரிந்த நாரங்கொட போன்ற இடங்களும் இவ்வகையான இடங்களாகும்.

எனவே திருகோணமலைப் பகுதியில் துன்புறுத்தலுக்கு உள்ளான கத்தோலிக்கர் குடியேறிய இடமாக வெல்வெரி அமைந்திருக்கச் சாத்தியங்கள் உள்ளன.

**வெல்வெரி ஆலயத்தின் பெயர்**

வெல்வெரியில் அமைந்துள்ள கத்தோலிக்க ஆலயம் தூய யாகப்பருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயமாகும். ஆலயத்திற்கான பெயரிடுதலில் பொதுவாக இரண்டு முறைகள் காணப்படுகின்றன.

1. போர்த்துக்கேயர் பெயரிட்ட முறை
2. பிற்கால மறைபணியாளர்கள் பெயரிட்ட முறை

போர்த்துக்கேயர் தம் மொழி அடிப்படையில் பெயரிட்டார்கள். எனவே தூய யாகப்பரின் ஆலயங்கள் **'சந்தியாகப்பர் ஆலயம்'** என்று அழைக்கப்பட்டன (San Diago ~ தூய யாகப்பர்). வெல்வெரி ஆலயத்தை இன்றும் எம் மண்ணின் மூத்த கத்தோலிக்கர் சந்தியாகப்பர் ஆலயம் என்றே அழைக்கின்றனர். எனவே இது போர்த்துகேயர் காலத்திற்கு உரியதாகவோ அல்லது போர்த்துகேய வழிமரபினரின் காலத்திற்குரியதாகவோ இருந்திருக்க வேண்டும். எனவே இம் மறைமாவட்டத்தின் மிகப் பழைய கத்தோலிக்க ஆலயங்களின் வரிசையில் வெல்வெரி ஆலயமும் இடம்பெறுவது நாம் பெருமை கொள்ளக்கூடிய விடயமாகும்.

தொடர்ச்சி... 4ம் பக்கம்.

# இறைவனின் இரக்கம் இதயங்களைத் தொட அனுமதியுங்கள்




இறைவனின் இரக்கம் இதயங்களைத் தொட்டு, அவை மாற்றம் அடைவதற்கு அனுமதிக்குமாறு இளையோரைக் கேட்டுக் கொண்டார், 2016ம் ஆண்டின் கிராக்கோவ் உலக இளையோர் தின பொது ஒருங்கிணைப்பாளர் ஆயர் Damian Muskus

2016ம் ஆண்டு ஜூலை 26 முதல் 31ம் திகதி வரை போலந்து நாட்டின் கிராக்கோவ்நகரில் நடைபெறவிருக்கும் உலக இளையோர் தினத்தில் கலந்து கொள்வதற்கு தயாரித்து வரும் இளையோர்க்கென எழுதியுள்ள திறந்த கடிதத்தில் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார் ஆயர் Muskus

இந்த உலக இளையேர் தினத்தின் தலைப்பான, "இரக்கமுடையோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். (மத். 5:7)" என்பது குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியையும் இளையோர்க்கு நினைவு படுத்தியுள்ளார் ஆயர் Muskus. புதிய ஆண்டில் இறைவன் தம் இரக்கத்தோடு உங்கள் இதயங்களைத் தொடுவதற்கு அவரை அனுமதியுங்கள் என்றும், இறைவனின் பிரசன்ன ஒளி உங்கள் அன்றாட வாழ்வை ஒளிரச் செய்யட்டும் என்றும் ஆயர் Muskus அவர்கள் இளையோர்க்கு எழுதியுள்ள திறந்த கடிதம் கூறுகிறது.

ஆதாரம் வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருட்படுத்தாததால்

- ஓர் ஆணியைப் பொருட்படுத்தாததால் மிதியடியை இழக்க நேரிட்டது.
- மிதியடியைப் பொருட்படுத்தாததால் குதிரையை இழக்க நேரிட்டது.
- குதிரையைப் பொருட்படுத்தாததால் குதிரை ஓட்டுனரை இழக்க நேரிட்டது.
- குதிரை ஓட்டுனரைப் பொருட்படுத்தாததால் போரில் தோற்க நேரிட்டது.
- போரினைப் பொருட்படுத்தாததால் அரசரை இழக்க நேரிட்டது.
- அரசரைப் பொருட்படுத்தாததால் நாட்டை இழக்க நேரிட்டது.
- நாட்டைப் பொருட்படுத்தாததால் சுதந்திரத்தை இழக்க நேரிட்டது.

# நினைவுச் சின்னம்

**அமெரிக்க நாட்டுப் பெண்மணி:** 'இறைவன் எல்லை கடந்தவர், உருவமற்றவர், பிறகு ஏன் உங்கள் நாட்டில் உருவ வழிபாடு செய்கின்றீர்கள்?" என்று சுவாமி விவேகானந்தரிடம் கேட்டார்.

**சுவாமி விவேகானந்தர்,** அந்தப் பெண்மணியிடம் வீட்டில் மாட்டியிருந்த படத்தைக் காட்டி 'இது யார்?' என்று கேட்டார் அந்தப்பெண்மணி 'இவர்தான் என் தந்தை' என்றார்.

**விவேகானந்தர்:** வெறும் சட்டமும், கண்ணாடியும் அட்டையும் அதில் உள்ள ஓவியமுமா உன் தந்தை? என்று கேட்டார்.

**பெண்மணி:** இல்லை, என் தந்தை அல்ல. ஆனால் என் தந்தையை நினைவூட்டும் நினைவுச் சின்னம்

**விவேகானந்தர்:** அதே போலதான் எங்கள் நாட்டு உருவங்களும் இறைவனை நினைவூட்டும் சின்னங்களாகத் திகழ்கின்றன.

## அன்பிய வழி இறை மந்தையை அறிந்து இறைவனின் இரக்கத்தை சுவைத்து வாழ்ந்திட.....

### இரக்கத்தின் ஆண்டுக்கான பாடல்

இரக்கத்தின் ஆண்டினிலே
இறைவனின் இரக்கத்தையே } 2
இறைஞ்சிடுவோம் இரக்கத்தையே ஆழம் கண்டிடுவோம்
இறை மந்தைதனை அன்பிய வழியில் ஏற்று அரவணைப்போம் ~ 2

இரக்கத்தின் ஆண்டினிலே ~ பிறரை
தீர்ப்பிட வேண்டாமே } 2
பழிச்சொல் வேண்டாம் (வேண்டாமே)
பழித்திட வேண்டாம் (வேண்டாமே) } 2
குறைகள் தவிர்த்து நிறைகள் காண்போமே ~ 2
இறைஞ்சிடுவோம் இரக்கத்தையே ஆழம் கண்டிடுவோம்
இறை மந்தைதனை அன்பிய வழியில் ஏற்று அரவணைப்போம் ~ 2

உண்மையை உரைக்கும் இறைவார்த்தை ~ அதன்
இதயத் துடிப்போ இரக்கமன்றோ } 2
இரக்கத்தில் இணைவோம் (இணைந்திடுவோம்)
இரக்கத்தில் மடிவோம் (மடிந்திடுவோம்) } 2
இரக்கம் விதைப்போம் மனிதம் மலர்ந்திடவே ~ 2
இறைஞ்சிடுவோம் இரக்கத்தையே ஆழம் கண்டிடுவோம்
இறை மந்தைதனை அன்பிய வழியில் ஏற்று அரவணைப்போம் ~ 2

நீதி நியாயம் சிறந்ததுவே ~ அதிலும்
இரக்கமோ என்றும் உயர்ந்ததுவே } 2
இறை துணை ஏற்போம் (ஏற்றிடுவோம்)
இரக்கத்தில் வாழ்வோம் (வாழ்ந்திடுவோம்) } 2
அயலார் கண்ணீர் துடைக்க விரைந்திடுவோம் ~ 2
இறைஞ்சிடுவோம் இரக்கத்தையே ஆழம் கண்டிடுவோம்
இறை மந்தைதனை அன்பிய வழியில் ஏற்று அரவணைப்போம் ~ 2

**அருட்பணி றொகான் பேணாட்**
**இயக்குனர்**
**பொதுநிலையினர் ஆணைக்குழு**
**திருமலை மறைமாவட்டம்**

## மரியின் மைந்தனே பிறக்க வேணும்

காரிருளில் நடந்த மக்கள்,
பேரொளியைக் கண்டனர்
காலங்கள் தோறும் - மாறாத
கர்த்தர் இயேசுவை பாலகனாக

நாட்டின் அவலங்கள் தீரவே,
நாளும் நீ பிறந்திட வேணும்
மாற்றம் காணா வாழ்விலே - எம்மை
மனிதனாக மாற்றிட வேணும்

மக்கள் பிழைகளை சுட்டிக்காட்ட
மறுபடியும் நீ பிறக்க வேணும்
மனித மாண்பினை வளர்த்திடவே
மாறா அன்போடு பிறக்க வேணும்

ஏழை எளியோர் உள்ளத்திலே - என்றும்
ஏற்றம் காண பிறக்க வேணும்
வாழும் வகை தெரியா - ஏதிலியர்
எந்நாளும் மகிழ்ந்திட பிறக்கவேணும்

உண்மை வாழ்வை உலகில் காண
உன்னதனே நீ பிறக்க வேணும்
மானிடர் வாழ்வு மாண்புற
மரியின் மைந்தனே பிறக்க வேணும்

**ஆக்கம். J. கிறிஸ்ரீயன் ரம்யா**
**தூய திருமுழுக்கு யோவான் ஆலயம்**
**சாம்பல் தீவு**

## உறவுகள் மலரும்போது

இதயங்கள் ஒன்றாகி இணைகின்ற போது
உறவுகள் உயிர்கொள்ளத் தொடங்குமே
பிளவுகள் பேதங்கள் வாழ்வினிலே
நிலைகொள்ள முடியாமல் மறைந்தகல
அங்கு உறவுகள் மேலோங்கி உயர்ந்து நின்றே
உண்மையின் வாழ்வினை உணர்த்தி நிற்க
அன்பின் அடித்தளங்கள் ஆனந்தமாகவே
இன்பமே வாழ்விலே இனிய நிலைகளால்
இதயங்கள் இனிதே களிகூரும்போது
இன்பமழையங்கு பொழிகின்றதே.

பங்குபற்றியோர் - 14பேர்
சரியான கவிதை வரிகளை எழுதியோர் - 04 பேர்
பரிசுத் தொகை 225/= ரூபாவாக 4பேருக்கும் சமமாக கொடுக்கப்படுகின்றது.

### பரிசுக்குரியவர்கள்

ஜே. நவீனா
209,தூய லூர்த்து மாதா வீதி
பாலையூற்று, திருகோணமலை

சா.ஜோண்கில்பட்
உவர்மலை, திருகோணமலை

எஸ். மேரி ஆன்
இல:43/16, ஆசிரியர் சதுக்கம்
உவர்மலை, திருகோணமலை

வர்ஷிபா மைக்கல் கொலின்
இல:78 திருமாள் வீதி
திருகோணமலை

பங்கு பற்றிய அனைவருக்கும் எங்களுடைய வாழ்த்துக்களும் நன்றிகளும்.

# வானதேவன் வழி நின்ற ஞான தூதன்

கிறிஸ்துவத்தின் அடிச்சுவட்டைச் சிரமேற்தாங்கிய
கடும் தவத்தின் காரணியாய்த் திகழ்ந்த ஞானி
திருச்சபையை வளர்ப்பதற்காய் செய்த தொண்டு
தெய்வமகான் யோசேப்வாஸ் முனிவரென்போம்!

உலகமெனும் பற்றுதலைத் துறந்த மகான்
ஊரூராய் மாறுவேடம் பூண்டுதினம்
பல எதிர்ப்பு நோக்கிடினும் வெற்றி கொண்டு
பாலகனாம் இயேசு வழி நெறிசமைத்தார்!

வானதேவன் வழி நின்ற ஞான தூதன்
வாழ்க்கையெல்லாம் இறைபணிக்காய் நின்றகாளை
தனதுயிரை மதியாது மன்னுயிரை
தரணியில் வித்திட்டார் யோசேவாஸ் செம்மல்!

வல்லரசு புரட்சிப்போர் தொடுத்தவேளை
வழிகேடாய் நின்ற மக்களை நலனைக்காக்க
அல்லு பகல் பாடுபட்டு உயிர்த்த இயேசுவின்
அடிச்சுவட்டின் புரட்சியினைத் தொடுத்த செம்மல்!

இந்தியாவின் கோவாயெனும் நகரில் பிறந்தோன்
ஈடுயில்லா இறைஞானச் சேவையீந்தோன்
பந்து சனம் யாவரையும் துறந்துமுற்றாய்
பாலன் இயேசு பணி நாடி ஈழம்வந்தோன்!

போதனையால் செபம் பூசை திருவழிமூலம்
போற்றுதற்கரிதான புதுமை செய்தோர்
சாதனையிற் பல கோடி நன்மையீந்து
சகலருக்கும் இறைஞானப் பேழையானார்!


யாழ்ப்பாணம், கண்டி, மன்னார் முதூராய்
யோசேவாஸ் முனிவர் சென்ற இடங்களெல்லாம்
பாழ்பட்ட பளங்கோயில் யாவுமின்று
பல்கலையும் தேறப் பறைசாற்றல் கண்டோம்!

ஆலயத்தின் மணியோசை ஒலிக்கும் தூரம்
அத்தனையும் இயேசுநாதர் சரித்திரம் கூறும்
காலதேவன் யோசேப்வாஸ் கல்லறைக்கு
[illegible] ஞானமாலை சூட்டிடுவோம்!

ஆயிரத்து இருநாற்றுத் தொண்ணூற்றேழில்
அகில ஈழ மக்களைக் கொள்ளைகொண்ட
மாய நோயாம் வைசூரி கொடுமை போக்கி
மாண்டவருக்கும் யோசேவாஸ் கருணை செய்தார்!

இப்படியாய் பல வருடம்தொண்டு செய்த
யோசேப்வாஸ் முனிவரவர் இளைத்தகாளை
இப்பணியைத் தொடர்வதற்கு நான்கு சீடர்
இவரை நாடிவந்ததையும் கூறுகிறேன்!

**அ. குமார் கொறேயிரா**
**பேராலயம்**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் யூபிலி ஆண்டில் இறை மீட்பரின் மனித அவதாரம்



ஆக இரக்கத்தின் அடையாளமாம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவை கொண்டாடுகின்ற நாங்கள் ஆண்டவர் இயேசுவின் வாக்கிற்கு அடிமையாகி, விண்ணகத் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல நாமும் இரக்கமுள்ளவர்களாகி இயேசு கிறிஸ்துவின் சீடர்களாவோம்.

**"உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள்" தூய லூக் 6:36**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த வருடம் மார்கழி 8ம் திகதி தொடங்கி வருகிற வருடம் கார்த்திகை 20ம் திகதி கிறிஸ்து அரசர் பெருவிழா வரையுள்ள காலப்பகுதியை இரக்கத்தின் யூபிலி ஆண்டாக பிரகடனபடுத்தியுள்ளார்.

நவீன உலகின் மாயைகளால் பாலியல் மோகத்திற்குள் தள்ளப்பட்டு, அதன் விளைவாக பெற்ற சிசுக்களை செய்வதறியாது அழித்த பல பெண்கள் குற்ற உணர்வுகளோடு வாழ்ந்து, விரக்தியடைந்த நிலையை திருத்தந்தை அவர்கள் பல வருடங்களாக அவதானித்து வந்துள்ளார். ஆகவே இவ்வாறாக பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களும் இறை இரக்கத்தை பெற வேண்டும் என்பது திருத்தந்தையின் அவாவாகும் அதன் முதற்கட்டமாக கருக்கலைப்பு பாவத்திற்கு பாவமன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை குருக்கள் அனைவருக்கும் வழங்கியுள்ளார். திருத்தந்தையின் இச்செயற்பாடானது யூபிலி ஆண்டை முன்னோக்கி, இறை இரக்கத்தின் எல்லையற்ற தன்மையை வெளிபடுத்தும் ஒன்றாக அமைந்திருக்கின்றது.

இந்த யூபிலி ஆண்டிலே ஒவ்வொருவரும் பரிபூரண பலனை இறைஇரக்க அனுபவமாக பெற வேண்டும் என்பதே திருத்தந்தையின் குறிக்கோள். ஏனெனில் எல்லா மனிதர்களாலும் புனித நகரான ஜெருசலேமிற்கு சென்று பாவப்பரிகாரம் செய்து பரிபூரண பலனை அடைய முடியாது. ஆகவே கத்தோலிக்கர் மட்டுமல்லாது அனைத்து மனிதர்களுமே இரக்கத்தை பெற வேண்டும் என்பது அவரது கருத்து.

இந்த யூபிலி ஆண்டு 2ம் வத்திக்கான் சங்கம் நிறைவுபெற்று (08.12.1965) 50வது ஆண்டு நிறைவு தினத்தை (18.12.2015) மையப்படுத்தினாலும் தூய கன்னிமரியாளின் மாசில்லாத உற்பவ பெருவிழா நாளில் ஆரம்பிப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

ஏனெனில் இறை இரக்கத்தை தன் வாழ்வில் அனுபவித்தது மட்டுமல்லாது அதற்கு சாட்சியமாகவும் வாழ்ந்து இன்றும் நாம் இறை இரக்கத்தை பெற பரிந்து பேசும் தாயாக இறை இரக்கத்தின் ஊடகமாக திகழ்கின்றவள் எம் அன்னைமரி. தூய தோமஸ் அக்குவைனஸ் அவர்கள் "இறைஇரக்கம் என்பது பலவீனத்தின் அடையாளத்தை தாண்டி அது ஒரு சர்வ வல்லமையின் வெளிப்பாடாக இருக்கின்றது" என்று தனது கருத்துக்களிலே வெளியிட்டிருக்கிறார்.

அதாவது ஒரு சர்வதிகாரி என்பவன் தனது வல்லமையை அழிப்பதில்தான் காட்டினானே ஒழிய அதைக் கொண்டு தனது மக்களுக்கு இரக்கம் காட்ட முனையவில்லை. இது வரலாறு ஆனால் இறைவன் அனைத்து மக்களையும் இரக்க கண் கொண்டு பார்க்கின்ற கடவுளாக இருக்கின்றார். ஆனால் பல மெய்யியலாளர்கள் சர்வ வல்லமை என்பது இரக்கத்தோடு உடன் போகாத ஒன்று என்று நிரூபிக்க முனைந்துள்ளார்கள் இறை வல்லமையானது இறை இரக்கத்தில் வெளிப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. அதாவது கடவுள் உலகமெங்கும் வியாபித்திருக்கும் சாத்தானை இலகுவில் அழிக்க முடியும் ஆனால் இறைஇரக்கத்தின் காரணத்தால் அவனை அழிக்காது அவனும் மனந்திரும்ப அவாக்கொண்டுள்ளார்.

இயேசு கிறிஸ்துவினுடைய மனித அவதாரமானது இறைஇரக்கத்தின் உச்சகட்டத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது அதாவது புனித பவுல் பிலிப்பயருக்கு எழுதிய திருமுகத்திலே இது தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கடவுள் நிலையிலிருந்த அவர் அதையே பற்றிக் கொண்டிருக்காமல் தம்மை வெறுமையாக்கி, அடிமை அவதாரமாகி மனிதருக்கு ஒப்பானர். அது மட்டுமல்லாது இழிவின் சின்னமான சிலுவையில் கூட சாவை ஏற்றுக் கொண்டார். (சுருக்கம் 2:6-8) அதாவது மனித இனத்தின் மீது அளவு கடந்த இரக்கம் வைத்ததினாலே எம்மை மீட்க கிறிஸ்து பிறந்தார்.

மேலும் இந்த யூபிலி ஆண்டிலே இறைவாக்கினர் எசாயாவுக்கு கிடைத்த அதே அழைப்பு எம் அனைவருக்கும் கிடைக்கின்றது.... ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரை குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையை பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவை தெரிவிக்கவும் **"ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழங்கவும், துயருற்று அழுவோருக்கு ஆறுதல் அளிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (சுருக்கம் 6:1-2)**

ஆக இந்த யூபிலி ஆண்டிலே நாம் ஒவ்வொருவரும் இறை இரக்கத்தை அனுபவிப்பதோடு நின்றுவிடாமல் சமயம்,இனம்,சாதி, பேதம் கடந்து எமது அயலவர்களும் இறைஇரக்கத்தையடைய கருவிகளாக மாறுவோம். மனித நேயத்தோடு இந்த யூபிலி ஆண்டிலே வாழ்ந்து இறைஇரக்கத்திற்கு சாட்சியமாவோம்.

இறுதியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அறைகூவலுக்கிணங்க உடல் சார்ந்த மற்றும் ஆன்மா சார்ந்த இரக்கச்செயல்களை செய்து இறைஇரக்கத்தை எம்மிலும், அயலவர்களிலும் அனுபவித்து கிறிஸ்து பிறப்பிற்கு சாட்சியமாவோம்.

**இறைஇரக்கம் என்றும் எம்மீது இருப்பதாக!**

**சகோதரர். ச.யூட் கெமில்டன்(யாழ் மறைமாவட்டம்)**
**மெய்யியல் 3ம் வருடம்**
**கண்டி தேசிய குருமடம்**

---

**தூய யோசேப் வாஸின் மூதூருக்கான பயணப்பாதை**

வெல்வெரிக் குளத்தின் மேற்காகச் செல்லும் காட்டுப் பாதையினூடாக விளாங்குளம் பகுதிக்கு வந்து அங்கிருந்து தம்பலகாமம் ஊடாக வேதத்தீவு நோக்கி அவர் பயணமானார். வண்ணத்திடல், தின்னெரிவெளி ஊடாக உப்பாறு பகுதியை அடைந்து அங்கிருந்த சேற்று நிலங்கள் ஊடாகப் பயணித்து, குறைந்தது மூன்று இடங்களில் மகாவலி கங்கையின் கிளை ஆறுகளை கடந்தார். வேதத்தீவு பகுதியிலும் கொட்டியாரப் பகுதியிலும் திருவருட்சாதனங்களை நிறைவேற்றிய அவர் கண்டிநோக்கிப் பயணமானார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் மிகவும் சாத்தியமான, பாதுகாப்பான வழி இதுவே ஆகும். இன்று இந்த உத்தேசப் பாதை சூரங்கல் பகுதியூடாக உப்பாறு செல்லும் பிரதேசமாக அமைந்திருக்கலாம்.

இதிலே மிகவும் ஆச்சரியமான ஒரு விடயம், அவர் வேதத்தீவிலிருந்து மகாவலி கங்கையைக் கடந்து கொட்டியாரத்திற்குச் சென்ற பாதையாகும். வேதத்தீவிற்கும் வண்ணான்குழிக்கும் இடையேயுள்ள மகாவலியின் ஒருபகுதி எப்பொழுதுமே ஆழம் இல்லாத பகுதியாகும். ஏனைய பகுதிகளில் முதலைகள் இருந்தாலும் இப்பகுதியில் முதலைகளும் இல்லை. இந்தப் பாதுகாப்பான பாதையை அவர் அறிந்திருந்தது ஆச்சரியமான ஒரு விடயமாகும்.

அருட்பணி மைக்கல் டீ மெல்லோவை கொட்டியாரத்திற்குக் கூட்டிச் சென்ற பயணம் நாரங்கொடையிலிருந்து அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் உடன் ஆரம்பமானது. அருட்பணி டீ மெல்லோ இறந்த பின் கொட்டியாரத்திலிருந்து தூய யோசேப் வாஸ் புத்தளம் நோக்கிப் பயணமானார். தூய யோசேப் வாஸ் பயணித்த இப்பாதை இன்னும் சரியாக தீர்மானிக்கப்பட முடியாத ஒரு பாதையாகக் காணப்படுகின்றது.

குறைந்தது மூன்று தடவையாவது தூய யோசேப் வாஸ் கொட்டியாரத்திற்கு வந்திருக்கின்றார் (1694/5, 1706, 1710).

**ஆங்கிலேயர் கால வெல்வெரி**

ஆங்கிலேயர் காலத்திலே காணப்பட்ட மதசுதந்திரம் காரணமாக வெல்வெரிப் பிரதேசம் ஆயரினால் ஆங்கிலேய அரசிடமிருந்து வாங்கப்பட்டது. அதன் பின் அங்கு தூய யாகப்பரின் ஆலயம் மீளக் கட்டப்பட்டு இயேசு சபைக் குருக்களால் நிர்வகிக்கப்பட்டது.

**சுதந்திர காலத்திலிருந்து இன்று வரை ...**

ஏறத்தாழ நாற்பது வருடங்கள் வெல்வெரி ஆலயமும் அங்கிருந்து பெறப்பட்ட நெல் மற்றும் புளி என்பனவும் நினைவு கூரப்பட வேண்டிய விடயங்களாகும். அருட்பணி அரசரெத்தினம், அருட்பணி றேமன் அரசரெத்தினம் ஆகியோர் வெல்வெரியில் இருந்து பணிபுரிந்த குருக்களுள் சிலராவர். இதற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டடத்தின் சிதைவுகள் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

1983ல் உருவான இனக்கலவரங்களின் பின் வெல்வெரி ஆலயம் பல்வேறு கட்டங்களில் அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. ஆலயம் உட்பட இப்பகுதி இலங்கை வான் படையின் முகாமாக மாற்றப்பட்டது. திருப்பீடம் இருந்த இடம் படையினரின் குளியல் இடமாக பயன்படுத்ததப்பட்டது. ஆலயத்தின் சுவரில் புத்தபிரானின் படம் வரையப்பட்டு வழிபாடு நடந்தது.

யுத்தம் முடிவடைந்த பின் இவ்வாலயம் நீண்ட போராட்டத்தின் பின் திருச்சபையால் பொறுப்பேற்கப்பட்ட போது இப்பகுதி முழுவதும் காடாகவும், சேற்று நிலமாகவும் காணப்பட்டது. தூய யாகப்பர் ஆலயம் சிதைவடைந்த ஒரு கட்டமாக காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

2015 ஆவணியிலிருந்து இப்பகுதி சிறிது சிறிதாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. **இப்பணிகளின் போது ஒல்லாந்தர் காலத்திற்குரிய முக்கியமான வரலாற்று ஆதாரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு மறைமாவட்ட ஆயரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.** எதிர் காலத்தில் மேலும் பல ஆய்வுகள் இப்பகுதியில் திருச்சபையால் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

எம்மண்ணிண் கத்தோலிக்கப் பாம்பரியமும், அடையாளங்களும் சிதைந்து போய்க்கொண்டிருக்கும் இக்காலத்தில், பல நூற்றாண்டு காலப் பாரம்பரியத்தைக் கொண்ட சந்தியாகப்பர் ஆலயம் புதுப் பொலிவு பெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அதிலும் சிறப்பாகத் தூய யோசேப் வாஸின் காலடிகள் பட்ட இப் புனித மண்ணில் நம் காலடிகளும் படுவதற்கு நாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

எதிர் காலத்தில் வெல்வெரி தொடர்பான ஆய்வுகள் முழுமை பெறும் போது நாம் அறியாத பல உண்மைகளை, ஆதாரங்களை இறைவன் நமக்கு வெளிப்படுத்துவார்.

**ஆக்கம்** அருட்பணி சீ.றோ. ஜெயரெத்தினம் ~ வெல்வெரி
ஆர். அசோக்குமார் ~ மூதூர்
அ. டிலக்ஷி ~ பாலையூற்று

*பின்குறிப்பு*

*வெல்வெரி தூய யாகப்பர் ஆலயம் தொடர்பான தகவல்கள் அறிந்தோர், புகைப்படங்கள், ஏனைய ஆதாரங்களை வைத்திருப்போர் மற்றும் வெல்வெரி ஆலயப்பகுதியில் பணிபுரிந்தோர் இத்தரவுகளைத் திருகோணமலை மறைமாவட்ட திருமறைப்பணி நிலையத்தில் அவற்றை கொடுத்து உதவுமாறு ஆயர் அவர்கள் அன்புடன் கேட்டுக் கொள்கிறார்.*

**இவ்வரலாற்றுக்கான உசாத்துணை நூல்கள்**

1. The Catholic Church in Sri Lanka. Dutch Period. Vol – I. Fr. V. Perniola sj
2. Palm Fringed Coast Fr. John W. Lange sj (2007)
3. 'மறக்கப்பட்ட மகான் அருட்பணி மைக்கல் டீ மெல்லோ' அருட்பணி சீ.றோ. ஜெயரெத்தினம்
4. திருச்சபை காணிப்பதிவேடு ஆயர் இல்லம், திருகோணமலை.

தொடர்ச்சி 5ம்பக்கம்

## குட்டிக்கதை ஒன்று

*Fr. NC*

ஒரு இடத்திலே படித்த இரு இளைஞர்கள் உரையாடுகிறார்கள். இருவரில் ஒருவர் சொன்னார் அந்த ஊரிலே உள்ள பிரபலமான ஒருவரைப்பற்றி அவர் இப்படித்தான் சொன்னார். அந்த பிரபலமானவரின் பெயரைச் சொல்லி அவருக்கு "ஹாட்" பிரச்சனையாம் கேள்விப்பட்டியா என்று சொல்லிக்கேட்டார்.

அதற்கு மற்றவர் சொன்னார் "ஹாட்" பிரச்சனை என்றால் இதயம் சம்பந்தமானது தானே; அது அவருக்கு வராதே என்று சொன்னார்.

மற்றவர் கேட்டார் "ஏன் வராது" என்று, அதற்கு அவர் சொன்னார் இதயம் உள்ளவருக்குத்தான் இதயப் பிரச்சனை வரும் இவருக்குத்தான் இதயமே இல்லையே என்று
**இதயத்தின் தூய்மை எங்களது உண்மை நிலையை வெளிக்காட்டுமென்பது உண்மைதானே... சரியா... பிழையா?**

## தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய அங்கத்தவர்கள் திருகோணமலை மறைமாவட்டம்.



இலங்கை தேசிய கத்தோலிக்க இளைஞர் சம்மேளனத்தின் இயக்குனர் அருட்பணி கிஹான் குணதிலக்க அவர்களும் அருட்சகோதரி அனஸ்டெசியா அவர்களும் தேசிய கத்தோலிக்க இளைஞர் குழுவினருடன் திருகோணமலை மறைமாவட்டத்தினரை தரிசித்தனர். குறிப்பாக தேசிய உறுப்பினரான குவாடலூப்பே பங்கைச் சேர்ந்த U. புவனதாஸ் அவர்களின் வீட்டினை தரிசித்து அவரது குடும்பத்தினருடன் உறவாடிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## காலங்கள் கதை சொல்லுமே..

அருட்பணி என். சீ. அருள்வரதன்

நிலவினைக் கண்டேன் வானில்
நிலவது பலகதை சொன்னதே
பல நிலைகளைத் தந்தவை சென்றாலும்
நிலவது நினைவூட்டி நின்றதே

பொங்கும் அலையோசை மேலோங்கவே
எங்குமே அமைதியின் நிலைகளங்கே
ஓங்கியே எழுகின்ற அலைகளுமே
நீங்காத கதைகளைச் சொல்கின்றதே

இருளும் வானிலே மேகங்களெல்லாம்
இருண்டே திரண்டு ஒன்றாகியே
பொழியும் போது அவைகள் சொல்லும்
மழையின் கதைகள் வேறாகுமே

ஒளிகள் மறைந்து ஒழிந்துகொள்ளவே
இருளின் காலம் அதுவாகுமே
வழிகள் இன்றியே வாழ்வினிலே
இருளின் கதைகள் வேறாகுமே

வாழ்ந்த காலம் ஒருநிலையாகவே
வளர்ந்த காலம் வேறொன்றாகியே
மலர்ந்த பூக்களாய் மணம் வீசவே
காலங்கள் கதைகளைச் சொல்கின்றதே

## மறை பணி

### கவிதைப் போட்டி

- மறையறிவுப் பணி வாழ்வை
- இறைபணியாய் ஏற்றெங்கும்
- குறையின்றித் துணைபுரிய
- பணியாளர் முன்வரவே
- இறையாசீர் அவர்களையே
- நிறைந்தென்றும் தொடர்வதோடு
- மறையறிவைப் பெறுவோரும்
- மன நிறைவு கண்டிடவே
- மனம் நிறைந்த பணிதனையே
- மகிழ்வுடனே கொடுப்போமே

**எவரும் சரியாக நிரைப்படுத்தவில்லை**

## முதியோர் சங்க வருடாந்த ஒன்று கூடல்



திருகோணமலை உவர்மலை குழந்தை இயேசு ஆலயப் பங்கின் முதியோர் சங்கம் பங்குத்தந்தை அருட்பணி இ. யூட் சர்வானந்தா அடிகளாரின் நெறிபடுத்தலின் கீழ் 2014. 02. 05.ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1. மாதாந்த கூட்டம் நடாத்துதல்
2. மாதாந்தம் உறுப்பினர் ஒருவரின் வீட்டில் செபமாலை வழிபாடு நடாத்துதல்.
3. முதியோர் இல்ல தரிசிப்பினை மேற்கொள்ளல்.
4. உறுப்பினர்களின் பிறந்த நாளினைக் கொண்டாடி மகிழ்வித்தல்
5. உறுப்பினர்களுக்கு சுகவீனங்கள் ஏற்படும் போது அவர்கள் வீட்டிற்கு சமுகம் தந்து பிரார்த்தித்தல்.
6. ஆலயப் பலிப்பூசைகளினை ஏற்பாடு செய்து சிறப்பித்தல்

போன்ற செயற்பாடுகளை சிரமமாக மேற்கொண்டு சிறப்பாக செயற்படுத்தி வருகின்றோம். தலைவராக திரு. என் திருச்செல்வம் அவர்களும் செயலாளராக திரு கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களும் பொருளாளராக திருமதி பேர்ணி செபஸ்தியான் அவர்களும் சங்கத்தினை வழிநடத்திக்கொண்டு வருகின்றனர்.

அன்பு, கரிசனை, பரிவு, சிநேகமான உறவாடல் என்பற்றிற்காக ஆதங்கப்படும் உள்ளங்களுக்கு ஆறுதலளிக்கும் விதமாக மிகவும் நெகிழ்வுத் தன்மையும் இயல்பான வகையிலும் பெரு விருப்புடன் முதியோர் சங்க செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

2015ம் ஆண்டின் வருடாந்த ஒன்று கூடல் 2015.11.25ம் திகதி பங்குத் தந்தையின் வழிகாட்டலிலும் நெறிப்படுத்தலின் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**தகவல் முதியோர் சங்க செயளாலர்**

## வெண்ணிலாவே கேட்பாயோ!

திருக்கோணமலை கடலில்
இருக்கையை விட்டெழுந்து
கதிர்த்திடும் வெண்ணிலாவே
கதையொன்றை கேட்பாயோ

இரக்கத்தின் ஆண்டைத் தந்த
பிரன்சிஸ் பாப்பரசர்
இருப்பாரே வத்திக்கானில்
எம் சேதி கூறிடாயோ!

அரக்கனாம் இராவணன்
அரசாட்சி செய்த தேசம்!
அங்கிருந்தே செய்திதனை
கொண்டு வந்தேன் என்பாயோ!

மடல் தந்த பாப்பரசர்
மறுபேச்சு பேசுமுன்னே!
கறாராக இரக்க ஆண்டை
கடைப்பிடிப்பேன் என்றே கூறு!

வறுமையிலே நாம் வாடினாலும்
மறுக்காமல் இரக்க ஆண்டை
சறுக்காமல் கடைப்பிடிப்போம்
என்றிடாய் வெண்ணிலாவே!

வத்திக்கான் நாம் செல்வதற்குள்
எம் வாழ்வே முடிந்துவிடும்
வடிவாக செய்திதனை
எடுத்தியம்பு வெண்ணிலாவே!

ஆயர் பணித்தளமோ இன்று
தூயவராய் மக்கள் வாழ!
துடிப்புடன் பணியாற்றுவதை
தூய வெண்ணிலாவே கேளாய்!

பழி தீர்க்கும் நிலை இழந்தோம்
விழிகசிய இரங்கிடுவோம்!
வழி தந்த பாப்புவிற்கு!
வெண்ணிலாவே நன்றி சொல்வாய்!


**கலைக்கோட்டன் அ. இருதயநாதன்**

**பழைய ஆலயத்தின் தோற்றம்**


முன்புறம்



உட்புறம்



திருப்பீடம் இருந்த இடம்



**புதுப்பிக்கப்பட்டுகொண்டிருக்கும் புதிய தூய யாகப்பர் ஆலயம் வெல்வெரி**







## அறிவித்தல்

**உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்**

கட்டண விபரம்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் ~ 2500.00 |
| | 1/2 பக்கம் ~ 5000.00 |
| கலர் | 1/4பக்கம் ~ 3750.00 |
| | 1/2 பக்கம் ~ 7500.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் இரக்கத்தின் ஆண்டிற்கான சுற்றுமடல்

**இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே**

அனைவருக்கும் மகிழ்ச்சி தரும்பும் கிறிஸ்து பிறப்புக்கால வாழ்த்துக்களுடன், பிறந்துள்ள 2016ம் வருட புத்தாண்டில் அளவுகடந்த ஆசீர்வாதங்களும் உரித்தாகட்டும். புத்தாண்டு 2016ல் நுழைந்துள்ள இவ்வேளையில் புதிய எதிர்நோக்கும், உந்துசக்தியும் எமக்கு பலமாகட்டும்.

நாம் வாழும் இக்காலத்தில் இறைவனின் இரக்கத்தை எங்கும் பறைசாற்ற வேண்டுமென திருச்சபை விரும்புகின்றது. **'இரக்கமே நற்செய்தியின் மையமாகும். நாம் வாழும் இக்காலப் பகுதியில் இறைவனின் இரக்கத்தை பறைசாற்றவும் அதற்கு சாட்சியம் பகரவேண்டிய தேவையிலும் மனிதகுலம் உள்ளது'** என்கின்றார் நம் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள். எனவே தனிமனிதனினதும், முழு உலகினதும் எதிர்நோக்கின் ஆதாரமாயுள்ள இறைவனின் இரக்கத்தை தாங்கிச்சென்று எங்கும் சாட்சிகளாவோம்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இரக்கத்தின் புனித ஆண்டானது நம் அனைவருக்கும் பிரதானமான சக்தியாக அமைகின்றது.
அதன் வாயிலாக இறைவனின் இரக்கத்தை எமது உள்மனவாழ்வில் உள்வாங்கிக்கொண்டு அதனை வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அறிக்கையிடுவோம்.

புதிய ஆயராக எம்மை அறிவித்த நாள் முதல் எமக்குள் தோன்றியுள்ள புதிய ஒன்றிப்பு, ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பினை வெகுவாக உணர்கின்றோம். அதன் வியக்கத்தக்க அனுபவத்தை ஆயர் திருப்பொழிவு நிகழ்வில் கண்டுகொண்டோம். இதற்கென தங்களது பாரியபங்களிப்பினை நல்கிய அருட்பணியாளர்கள், துறவியர்கள், இறைமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே தொடர்ந்தும் ஒன்றாக, ஒற்றுமையாக மகிழ்வுடன் வரும் சவால்களையும், தடைகளையும் வெற்றி கொண்டு பயணிப்போம், பணியாவோம்.

எமது ஆயர் பணியின் தொடக்கமுதல் நாம் பின்வரும் மூன்று பிரதான விடயங்களாகிய மறைமாவட்ட ஆன்மீகம், கல்வி மற்றும் சமூகசேவை என்பனவற்றில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். கடந்த ஆறு மாதங்களாக அவை குறித்த பணியினையும் ஆற்றி வருகின்றோம். இப்பிரதான விடயங்களை செயற்படுத்தும் மற்றும் அடையும் பணியில் நாம் மறைமாவட்டமாக ஒன்றிணைந்த முயற்சிகளை மேற்கொள்வோமென்று மகிழ்வுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

மேற்சொன்ன வழியில் முன்னுரிமையின் அடிப்படையில் திருத்தந்தையால் பரிந்துரைக்கப்பட்ட **'இரக்கத்தின் ஆண்டு'** எனும் கருப்பொருளை எமது மறைமாவட்டத் திட்டத்துடன் இணைத்துக் கொள்கின்றோம். இந்தவகையில் 2016ம் ஆண்டில் செயற்படுத்தும் வண்ணம் மூன்று முத்தான கருப்பொருள்கள் மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவையினூடாக தீர்மானிக்கப்பட்டுள்ளன.

### 1. விசேட இரக்கத்தின் யூபிலி ஆண்டு - மார்கழி 08, 2015 - கார்த்திகை 20, 2016

நம் திருத்தந்தையின் கனவு, விருப்பது யாதெனில் முழு உலகமும் அமைதிக்காக ஏங்கித் தவிக்கும் இந்நாட்களில், இறைவனின் இரக்கத்தை நாம் விசேடமான முறையில் அனுபவிக்க வேண்டு மென்பதாகும்.

பாரிய எதிர்நோக்குகளும், முரண்பாடுகளின் அடையாளங்களும் எங்கும் வியாபித்துள்ள இத்தருணமதில், கிறிஸ்துவின் திருமுகத்தை தியானிப்பதன் வாயிலாக அனைவருக்கும் கடவுளின் இரக்கத்தின் மறைபொருளை அறிமுகப்படுத்த வேண்டிய முதன்மைப்பணி நம்முன்னே நிற்கின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் **'நாங்கள் ஒவ்வொருவரும் நம்பத்தகுந்த சாட்சிகளாகவும், குணமளிக்கும் கருவிகளாகவும், ஆறுதல் நல்கும் தேற்றரவாளர்களாகவும் திகழ அழைக்கப்பட்டுள்ளோம்'** என்கின்றார். எனவே நாம் அனைவரும் எமது உயிரோட்டமுள்ள திறந்த மனங்களாலும், இரக்கமிகுந்த இதயத்தாலும் கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் வெளிக்கொணர்வோம். மேலும் **'கடவுளின் மீட்பளிக்கும் அன்பினை சுவைத்தவர்கள் அதனை தங்களது வாழ்வினாலும், செயலினாலும் அறிக்கையிடாமல் இருக்கமுடியாது'** என்றும் பகர்கின்றார் நமது திருத்தந்தை.

**'தந்தையைப் போன்று இரக்கமுள்ளவராய் இருங்கள்'** என்பது இவ்வாண்டிற்கான விருதுவாக்காகும். **'ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர், நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்'** (திபா. 103:8). இருந்தபோதிலும் தொடக்கமுதலே மனிதகுலம் இறைவனுக்கு எதிராக கலகம் புரிந்துவந்துள்ளது. ஆயினும் கடவுள் இரக்கத்துடனும், பொறுமையுடனுமே அவர்களோடு செயலாற்றினார். ஏனெனில் **'என்றும் உள்ளது அவரது பேரன்பு'** (திபா. 136:25). இயேசுகிறிஸ்து தமது பொதுவாழ்வு முழுமையிலும் அதே கடவுளின் இரக்கத்தை காண்பித்து மக்களை இரக்கமுள்ளவராய் வாழ அழைப்பு விடுத்தார். இந்தக் கிறிஸ்துவே தந்தையின் இரக்கத்தின் திருமுகமாகும். இயேசுகிறிஸ்து தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்கு இரக்கமும், மன்னிப்பும் அளித்து கடவுளின் இரக்கத்தை தம்வாழ்வின் இறுதிவரையும் காண்பித்தார்.

திருத்தந்தை பிரான்சீஸ் இரக்கத்தின் யூபிலி ஆண்டினை வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்காவின் புனித வாயிலினை திறந்துவைத்ததன் வாயிலாக தொடங்கி வைத்தார். இதுவொரு அடையாளச் செயலாகும். இது நமக்கோர் புதிய விடுதலைப்பயண அனுபவமாகும்.

அதாவது ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு நகர்வதாகும். பாவத்திலிருந்து புதுவாழ்விற்கு செல்லுவதாகும். இது இன்னுமொரு பாஸ்கா அனுபவமும், புதிய திருப்பயணமுமாகும். இவ்வடையாளச் செயலானது வெறுமனே வத்திக்கானில் மாத்திரம் இடம்பெற வேண்டுமென திருத்தந்தை ஆசிக்கவில்லை. மாறாக உலகெங்குமுள்ள மறைமாவட்ட பேராலயங்களிலும், மற்றும் பெருவாரியாக இறைமக்கள் திருப்பயணிகளாக கூடிவரும் திருத்தலங்களிலும் இடம்பெற வேண்டுமென அழைப்பு விடுக்கின்றார். இதற்குப் பிரதான காரணம் திருத்தலங்களில் நடைபெறும் வழிபாடுகள் வாயிலாக திருப்பயணிகள் தங்களை புதுப்பித்துக்கொள்வதுடன், ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்பதன் வாயிலாக தங்களது வாழ்வினையும் சரிசெய்து கொள்கின்றார்கள்.

இதனடிப்படையில் இறைமக்கள் இவ்விரக்கத்தின் ஆண்டில் ஆழமான ஆன்மீக திருப்பயணங்களை மேற்கொள்ள அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள் பங்குமட்டங்களிலும், மறைமாவட்ட மட்டத்திலும் நடைபெறும்.

### 2. அவரது மந்தையின் வாடையினை அறிதல்

இயேசுகிறிஸ்து திருச்சபையை திருத்தூதர் பேதுருவின் அருட்காவலுக்கு **'என் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்'** (யோவா. 21:15) என்று கூறி ஒப்படைத்தார். அவரிடம் ஒப்படைக்கப்பட்டவை இறைவனின் மந்தைகளே தவிர பேதுருவினுடையவையல்ல. அவ்வாறே நாம் அனைவரும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகள் அனைத்தும் இறைவனுடையவை என்பதனை மனதிலிருத்தி மந்தைகளைப் பேணிக்காக்க வேண்டும். ஆயர் முதல் குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரும் தாம் யாரைப் பேணிக்காக்க வேண்டுமென்பதை நன்கு அறிந்திருக்க வேண்டும். திருத்தந்தையும் நமக்கு விடுக்கும் அழைப்பு யாதெனில் நாம் நமது மந்தைகளின் வாடையை (வாசனை) நன்கு அறிந்திருக்க வேண்டுமென்பதாகும்.

எனவே ஒருவர் ஒருவரை அறிந்துகொள்ள முழு முயற்சி எடுப்போம். பங்குத்தந்தையர்கள் தமது பங்குமக்களை தரிசித்து அவர்களைக் குறித்து இன்னும் அதிகமாய் அறிந்து கொள்வதுடன், அவர்களது இன்ப துன்பங்களில் இரண்டறக் கலக்கவேண்டும். பரஸ்பர பகிர்வினூடாக தங்களது துறவற இல்லங்களில் வாழும் குருக்கள், அருட்சகோதர, சகோதரிகள் ஒருவரை ஒருவர் அறியமுற்பட வேண்டும். அவ்வாறே மறைமாவட்ட ஆணைக்குழுக்களில் பணியாற்றும் இயக்குனர்கள் தம்மோடு பணியாற்றுபவர்களையும், தமது பணிக்கென ஒத்துழைப்பு நல்குவோரையும் அறிய முற்படவேண்டும். பெற்றோர்கள் தங்களது குழந்தைகள், சிறார்கள் குறித்து அதிகம் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறே குடும்பங்கள் தங்களது அயலில் வசிப்போரை அறிந்திருக்க வேண்டும். மறைமாவட்டத்தின் தலைமை மேய்ப்பர் என்கின்ற வகையில் மறைமாவட்டத்தின் அனைத்து கத்தோலிக்க குடும்பங்களையும் அறிய முற்படுவதோடு, விசேடமாக எமது உடனடி ஒத்துழைப்பாளர்களாகிய குருக்கள், துறவியரின் குடும்பங்களை அறியவேண்டிய முயற்சிகளை நாம் மேற்கொள்வோம்.

எனவே மந்தைகளின் வாடையினை அறிந்துகொள்ள ஒருமித்த முயற்சிகளை நாமனைவரும் இணைந்து இவ்வாண்டில் மேற்கொள்வோம்.

### 3. சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குவதும், வலுப்படுத்துவதும்

இதனை நாம் எமது மேய்ப்புப்பணியின் முன்னுரிமையாக நடப்பு ஆண்டிலும், வரவுள்ள ஆண்டுகளிலும் செயற்படுத்த முன்மொழிவு செய்கின்றோம். சிறிய கிறிஸ்தவ குழுமங்களானது ஒருவர் ஒருவருக்கு கடவுளின் வார்த்தையினை எளிய, இலகுவான முறையில் அனுபவிக்கவும், அதனைப் பகிரவும் உதவுவதுடன், குழுமங்களின் உறுப்பினர்களை அறிந்துகொள்ளவும், மேலும் ஒருவர் ஒருவருக்கு உதவியாகவும், ஒத்தாசையாகவும் இருக்கவும் உதவுகின்றன. ஏற்கனவே அநேகமான பங்குகளில் சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் சிலமிகுந்த உத்வேகத்துடன் செயற்படுகின்றன. இன்னும் பல மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவையில் உள்ளன. எனவே குருக்கள், துறவியர்கள் மற்றும் பொதுநிலை ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சிகள், கருத்தரங்குகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கான அடிப்படை முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதனடிப்படையில் இறைவார்த்தைப் பகிர்வுக்கான ஏழு படிமுறையினை அறிந்து செயற்படுத்த பங்கு மற்றும் மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்கள் குழுக்களை உருவாக்கவுள்ளோம். ஏற்கனவே மறைமாவட்ட மற்றும் பங்குகள் மட்டங்களிலும் பயிற்சிகளைப் பெற்றவர்கள் சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வினை பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்வார்கள். அனைத்து பங்குளிலும் சிறிய கிறிஸ்தவ குழுமங்களை ஊக்குவிப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

அனைத்து பங்குத்தந்தையர்கள், ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள், துறவியர்கள் மற்றும் இறைமக்கள் அனைவருக்கும் நாம் விடுக்கும் அறைகூவல் என்னவெனில், முக்கியத்துவம் தராத நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதையும், ஒழுங்குசெய்வதையும் தவிர்த்து, மறைமாவட்டத்தின் இவ்வாண்டிற்கான மொழிந்துரைக்கப்பட்ட மேற்சொன்ன கருப்பொருள்களில் அதிக கவனமும், அக்கறையும் செலுத்தவும்.

நாம் அனைவரும் இவ்வாண்டில் கடவுளின் இரக்கத்தினை அனுபவிக்கவும், பகிரவும் மற்றும் ஒருவர் மற்றவரிடமிருந்து அதனை அறியவும், கற்றுக்கொள்ளவும் ஒன்றாக இணைந்து செயற்படுவோம்.

இவ்வாண்டிற்கான அனைத்து முயற்சிகளிலும் இரக்கத்தின் இறைவன் நம் அனைவரையும் வழிநடத்துவாராக. இரக்கத்தின் திருவடிவம் முதலில் ஒரு பெண்மையின் மற்றும் தாய்மையின் திருமுகமாகும் என்பதனை அறிந்துகொள்வோம். அந்தவகையில் அன்னை மரியாளினதும், தூய யோசேப்பினதும் பரிந்துரையும், அருட்காவலும் நம் அனைவரையும் பின்தொடர்ந்து, அன்பில் ஒன்றித்து பயணிக்கவும், ஒருவர் ஒருவரை பராமரித்து பேணவும் இவர்கள் துணைபுரிவார்களாக.

இறுதியாக 2016ம் ஆண்டு அமைதி, ஒற்றுமை, சேவை மற்றும் இரக்கம், போன்ற ஆசீர்வாதங்களை உங்கள் ஒவ்வொருவருக்கும் தாங்கி வருவதாக. தூய திரித்துவத்தின் ஆசீரை அனைத்துக் குடும்பங்களின் மீதும் இரந்து கேட்டு நிற்கின்றோம்.

**பேரருட்திரு. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

**தை.03.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 16
## திருத்தூதர் பணி அதி 13 - 16 வரை

**அன்பார்ந்த வாசகர்களே**

"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும். 1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 15. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 01. 2016**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ■ | நா | | | | | | | ■ |
| | ■ | ப | | | | | | | பொ |
| | ம | ■ | உ | ■ | ■ | ■ | ஈ | | |
| | | வா | | | நெ | ■ | | | |
| | | | | | | | | | |
| ■ | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | ■ | | ■ | | | | |
| வா | | ■ | ■ | பு | ■ | ஊ | ■ | த | |

01. கதி....வனை 02. நானூ.....றை.....பது
03. ஈன்றெ......த்.....ன் 04. ம....ப்புக்கு.....ய
05. உ......வளி....து 06. பம்.....லி.... 07. வா.......த்.....கள்
08. வா......மொ...... 09. ஊக்....மூ....டி 10. த....மை
ந.....வர்.....ள் 11. பொ....து விடி....த....ம்
12. நெ.....ப்பொ...... 13. புகழ்.....பா பா.....

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 15
## திருத்தூதர் பணி அதிகாரம் 09 - 12

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச | வு | ல் | த | ரை | யி | லி | ரு | ந் | து |
| து | போ | த | ந் | ற | தி | த் | வை | த | க |
| ப | ■ | தோ | ■ | ஒ | ■ | ■ | ல் | கை | ■ |
| சி | ன் | ல் | ■ | ரு | ள் | ச | யி | ம் | யா |
| உ | டே | ப | டு | ங் | க | ங் | வா | பெ | கி |
| ண் | ண் | த | ண் | கி | சி | கி | பு | ண் | க் |
| டா | க | னி | ரா | ணை | ட் | லி | ம் | க | யோ |
| யி | சி | டு | ஒ | ந் | சா | க | ரு | ள் | தி |
| ற் | ட் | ம் | ■ | து | ■ | ள் | இ | ■ | ந் |
| று | கா | ■ | அ | ர | ண் | ம | ணை | ■ | அ |

1. சவுல் தரையிலிருந்து 2. கைம் பெண்கள்
3. கதவைத் திறந்தபோது 4. தோல் பதனிடும்
5. பசி உண்டாயிற்று 6. சாட்சிகள் 7. காட்சி கண்டேன் 8. அந்தியோக்கியா 9. ஓராண்டு
10. சங்கிலிகள் 11. இரும்பு வாளால்
13. ஒருங்கிணைந்து

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

## பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
S.N. ஜதுர்ஷன்
216/20, சுடரொளிலேன்
பாலையூற்று

**3ம் பரிசு 200/=**
ரெ. மேரி றொஷானி
29/12A, இலிங்கநகர்
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
அ.தருசிமேரி
யாட்அடை வீதி
திருகோணமலை



பங்குபற்றியோர் ~ 47பேர்
சரியானவிடையளித்தோர் ~ 44பேர்

## பாராட்டுக்குரியவர்கள்

01. L.P கிர்ஷாலி ~ பாலையூற்று
02. ச.டே. வோறன் பிள்ளை ~ உவர்மலை
03. G. கிஷோன் ~ பாலையூற்று
04. நவீனா. ஜே ~ பாலையூற்று
05. A. கிறிஸ்டி றோஷினி ~ பாலையூற்று
06. எட்மன் ரஜித் ~ நிலாவெளி
07. டானியலா ஆர்.எப் ~ பேராலயம்
08. அ. கரோலினி கீர்த்திகா ~ பேராலயம்
09. அப்சரா நிவேதி .R ~ நிலாவெளி
10. சீனா எல்டன் ~ அன்புவழிபுரம்
11. A. சாம் போல் ~ பாலையூற்று
12. சா. ஆன் அன்ரனீற்றா ~ உவர்மலை
13. யோ. அருஷன் ~ அன்புவழிபுரம்
14. ஜொனத்தன் F.E ~ பேராலயம்
15. திருமதி டே திதிஸ்வரி ~ உவர்மலை
16. றெ. கன்சி ~ நிலாவெளி
17. அ. ஜீவகாந்த் ~ பாலையூற்று
18. சரோனா ஆர்.எப் ~ பேராலயம்
19. ஆன் வஜீரா ஆர்.எப் ~ பேராலயம்
20. நிரஞ்சு சொமிபாலா ~ பாலையூற்று
21. த. டிலசியா ~ இலிங்கநகர்
22. G. டிலுசன் ~ பாலையூற்று
23. ரொ. ரொவீனா ~ பேராலயம்
24. ரொ. நியோனா ~ பேராலயம்
25. மை. வர்ஷிபா ~ குவாடலூப்பே
26. வேஜின் டி குரூஸ் ~ அன்புவழிபுரம்
27. லிட்வினா லப்பன் ~ பாலையூற்று
28. J. கிஷானி ~ இறைஇரக்கம்
29. ஜெ. நியோலின் ~ குவாடலூப்பே
30. செ. றொஷானி ~ இலிங்கநகர்
31. த. அனிஸ்ரன் ~ இலிங்கநகர்
32. ஜொ. மகன்சிபோல் ~ பாலையூற்று
33. டே. மெருஷியன் பிள்ளை~ உவர்மலை
34. தே. வனுஷாலினி ~ இலிங்கநகர்
35. V. சொய்ஸ் கிளின்டன் ~ நிலாவெளி
36. யூ.டி. ஜெசிந்தா ~ இலிங்கநகர்
37. N.S. சதுர்ஷன் ~ பாலையூற்று
38. உ. ஜனா ~ பாலையூற்று
39. சி. அஜந்தா ~ பாலையூற்று
40. ஞ. ஜோன் கில்பேட் ~ உவர்மலை
41. தே. சமில்டன் ~ நிலாவெளி

### குறிப்பு:

## தவறுக்கு வருந்துகிறோம்

விடுபட்ட எழுத்துப்புதிர் போட்டி இல: 15ல் கடைசி வரியில் அமைந்துள்ள **'அ'** என்ற எழுத்துக்குரிய சொல் தவறுதலாக இடம் பெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அதற்குரிய சொல் **'அரண்மனை'** ஆகும். அனைவரின் கூப்பன்களும் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஆசிரியர்.

## எது பெரியது?

தெய்வப் புலவர் திருவள்ளுவரிடம் ஒருவர் மூன்று கேள்விகள் கேட்டார். அந்த மூன்று கேள்விகளும் அதற்குத் திருவள்ளுவர் தந்த பதில்களும் பின்வருமாறு.

கேள்வி: இந்த உலகத்தைவிடப் பெரியது எது?
பதில்: 'காலத்தினால் செய்த உதவி சிறிதெனும் ஞாலத்தின் மாணப் பெரிது'

கேள்வி: மலையைவிடப் பெரியது எது?
பதில்: நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது

கேள்வி: கடலைவிடப் பெரியது எது?
பதில்: பயன் தூக்கார் செய்த உதவி நலன் தூக்கின் நன்மை கடலில் பெரிது

(தக்க காலத்தில் செய்த உதவி - உலகைவிடப் பெரியது. அடக்கத்தோடு, ஆணவமின்றி வாழும் வாழ்க்கை - மலையைவிடப் பெரியது. பயன் கருதாமல் செய்யப்படும் உதவி - கடலைவிடப் பெரியது)

### ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் - 21
### நீதித்தலைவர்கள் (11-21 அதிகாரங்கள்)
### விடைகள்

1. நரிகள் (15:04-05)
2. தோபு நாட்டில் (11:03)
3. யூதா (20:18)
4. ஆறு ஆண்டுகள் (12:07)
5. சேரா, ஏசுதாவேலுக்கு (13:25)
6. ஏறக்குறைய 3000 பேர் (16:27)
7. ஏன்ககோரே (15:19)
8. தேனும் சிங்கமும் (14:14,18)
9. இலாயிசு (18:28)
10. அரசன் கிடையாது (21:25)

**பங்குபற்றியவர்கள்: 36 பேர்**
**மிகச்சரியான விடையளித்தோர்:16 பேர்**
**பங்குபற்றிய அனைவருக்கும் பராட்டுக்களும் நன்றிகளும்**

## பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வி பி.ராஜினி
வண்ணான்குளம்
முல்லைத்தீவு

**2ம் பரிசு 300/=**
செல்வி பி. ஜக்குலின்
இல: 276 பிரதான வீதி
கன்னியா, திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
செல்வன் கே.எம். ஸ்டீவன் விராஜ்
6ம் கட்டை, பெரியகுளம்
சாம்பல்தீவு, திருகோணமலை

## பாராட்டுக்குரியவர்கள்

01. ம. ஜைமன் ~ மூதூர்
02. க. சுகந்தினி ~ மூதூர்
03. டெ. இவேஞ்சலின் ~ உவர்மலை
04. இ. ஜெசானியா ~ பேராலயம்
05. துதினா சஜீவன் ~ இலிங்கநகர்
06. டானியலா பி.ஆர்.எப் ~ பேராலயம்
07. டெ. சனோச் அன்ரனி ~ உவர்மலை
08. ஆன் வஜிரா ஆர்.எப் ~ பேராலயம்
09. தே. சமில்டன் ~ நிலாவெளி
10. சரோதை ஆர்.எப் ~ பேராலயம்
11. அ. மேரி திரேஷா ~ மூதூர்
12. ஷெரின் ஜேம்ஸ் ~ பாலையூற்று

### ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் - 23
### 1சாமுவேல் 01 - 10 அதிகாரங்கள்

1. ஏலி இஸ்ரயேலை எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்?

**விடை**.........................................................

2. அன்னா கருவுற்று எத்தனை குழந்தைகளைப் பெற்றெடுத்தார்?

**விடை**.........................................................

3. ஆண்டவரின் பேழை பெலிஸ்தியரின் நாட்டில் எத்தனை மாதம் இருந்தது?

**விடை**.........................................................

4. ஆண்டவரின் இல்லத்தில் யார் படுத்திருந்தார்?

**விடை**.........................................................

5. பேழை கிரியத்து எயாரிமில் எவ்வளவு நாள் தங்கியது?

**விடை**.........................................................

6. நான் உள்ளம் நொந்த பெண் என்று யார் கூறியது?

**விடை**.........................................................

7. பெத்சமேசு வாழ் மக்களை சாக அடித்தது யார்?

**விடை**.........................................................

8. சவுல் யாரை விட்டுத் திரும்பும் போது கடவுள் அவர் உள்ளத்தை மாற்றினார்?

**விடை**.........................................................

9. இன்றைய இறைவாக்கினர் அன்று எப்படி அழைக்கப்பட்டனர்?

**விடை**.........................................................

10. பெயேர் செபாவில் நீதித் தலைவர்களாய் இருந்தவர்கள் யார்?

**விடை**.........................................................

பெயர் ..............................................
முகவரி ..............................................
பங்கு ..............................................
அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 01. 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினருக்கான விவிலிய வினாவிடைப் போட்டி



கததோலிக்க இளைஞர் ஒன்றியத்தினருக்கான விவிலிய வினாவிடைப் போட்டி (தோபித்து நூலில்) செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலயத்தில் 08.11.2015 அன்று நடைபெற்றது இப்போட்டியில் தூய மரியாள் பேராலயம், செல்வநாயகபுரம், அலஸ்தோட்டம், உவர்மலை, ஆகிய பங்குகளிலிருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதில் முறையே செல்வநாயகபுரம், தூய மரியாள் பேராலயம், உவர்மலை ஆகியபங்குகள் 1,2,3ம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

# குருத்துவமும் பிறந்த தின நிகழ்வும்



உவர்மலை இலிங்கநகர்பங்குத் தந்தையான அருட்பணி இக்னேசியஸ் ஜீட் சர்வானந்தன் அவர்கள் தமது குருத்துவ பணியினை திருகோணமலை தூய மரியாள் பேராலயத்தில் 2008.11.12ம் திகதி இறை ஆசீரோடு ஆரம்பித்து அப்போதைய இணைப்பேராலயமான மட்டக்களப்பு புளியந்தீவு தூய மரியாள் பேராலயத்தில் துணைப் பங்குத் தந்தையாக இரண்டரை வருடம் பூர்த்தி செய்து, தற்காலிகப் பங்குத்தந்தையாக ஆறுமாதங்கள் மட்/இருதயபுரம் இருதய ஆண்டவர் ஆலயத்தில் பணியாற்றி 2012ல் மட்/தன்னாமுனை சூசையப்பர் ஆலயத்தில் ஒருவருட பணியினை மேற்கொண்டு திருகோணமலை தனி மறைமாவட்டமான போது அவ்வருடமே உவர்மலை, இலிங்கநகர் பங்கினைப் பொறுப்பேற்று மூன்று வருடங்கள் பூர்த்தியாகிய நிலையில் கடந்த 12.11.2015 தமது குருத்துவப்பணியின் 7ம் ஆண்டினைப் பெருமையுடன் நிறைவு செய்வதோடு 21.11.2015ல் தமது 36வது வயதின் பிறந்ததின நிகழ்வையும் இணைத்து இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலய முன்றலில் 22.11.2015 அன்று வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. பக்திச் சபைகள் அனைத்தும் இணைந்து கவிதைகள், கவிப்பாக்கள், நடனங்கள், வில்லுப்பாட்டுக்கள் போன்ற நிகழ்வோடு பங்குமக்கள் அனைவரும் இணைந்து வாழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

**தகவல்**
**C.T. சௌந்தரதாஸ்**
**தூய யோசேப்வாஸ் மூப்பர் அமைப்பு இலிங்கநகர்**

# தேசிய இளைஞர் ஞாயிறு





கார்த்திகை மாதம் 11ம் திகதி திருகோணமலை இறைஇரக்கத் திருத்தலத்தில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தேசிய இளைஞர் தின திருப்பலி அருட்பணி பி. போல்றெபின்சன் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனர் அருட்பணி S.S ஜோன்பிள்ளை ஆகியோரின் தலைமையில் சிறப்பு கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் விசேட காணிக்கைகள் சேகரிக்கப்பட்டு வயோதிபர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் எகேட் கரித்தாஸ் நிறுவனத்தின் கல்விப் பிரிவு பொறுப்பாளர் செல்வி சூர்யா அவர்களால் தலைமைத்துவ கருத்தரங்கும், குழுச்செயற்பாடும் நடைபெற்றது.

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

"ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலிப்பியர் 1:21)

மலர்வு
1984
11
16



உதிர்வு
2014
01
15

## Dr. ஜெயரெட்னம் றொபின்சன்



அன்பின் பரலோக பிதாவே...
இயேசு இரட்சகரே..
வல்லமையின் ஆவியாரே...

உம்மைப் போற்றிப்புகழ்ந்து நன்றி கூறி துதிக்கின்றோம் ஐயா! "நீ என்னுடைய பார்வையில் விலையேறப் பெற்றவன் மதிப்பு மிக்கவன், உன்மீது அன்பு கூர்கிறேன்.. என்று எங்களை நேசித்து வாழ்வைக் கொடுக்கின்றவரும் நீரே!

எம் சகோதரன் ஜெயரெட்ணம் றொபின்சனின் வாழ்வுக்காய் நன்றி ஐயா!

அவர் வழியாக நாம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுக்காய் நன்றி தகப்பனே! எங்களுக்காக பரலோக வாழ்வை வாக்குப்பண்ணிய நித்திய பிதாவே! எம் சகோதரன் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த நிலைவாழ்வையும், நித்திய பேரின்பத்தையும் கொடுத்து உம் புனிதரின் தோழமையில் அவரையும் ஏற்றுக் கொள்ள வேண்டி ஜெபம் செய்கிறோம் எங்கள் நல்ல பிதாவே..!

ஆமென்! ஆமென்! ஆமென்!

தகவல்: தாயார்
உவர்மலை
திருகோணமலை

# 41வது நாள் நினைவஞ்சலி

மலர்வு
1924
01
02



உதிர்வு
2015
11
26

## மாசலின் அல்போன்ஸ்

பாலையூற்று மூத்த குடியும் பூர்வீக கிறீஸ்தவனும் 91 வருடங்கள் கம்பீரமாக வாழ்ந்த அல்போன்ஸ் அய்யாவை இழந்துவிட்டோமே என்று எங்களை கேட்கிறார்களே பலர் அதுமட்டுமா பாலையூற்று கெபிக்கு போனபோது கெபியில் உள்ள கல், மரங்கள், கிணறு, ஏன் கிணற்று நீர் கூட அப்பா அல்போன்ஸ் எங்கே என கேட்கும் ஓசை எனக்கு கேட்கிறது. அய்யா நீங்கள் இந்த உலகை விட்டுப் பிரிந்து 41 நாட்கள் கடந்தாலும் எங்கள் மனங்களை விட்டு இன்னும் பிரியவில்லை உங்கள் ஆத்மா சாந்தியடைய லூர்த்து மாத வழியாக கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்

தகவல்: ஏ எட்றின் பயஸ்
பாலையூற்று
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன' (தூய லூக்கா 2 : 31)